பெறுநர். 10.07.2017

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்,
சென்னை – 2

மரியாதைக்குரிய ஐயா,

பொருள் : நிர்வாகம் - டான்ஜெட்கோ பணியாளர்களின் விருப்ப மாறுதல் - வழிகாட்டும் முறைகள் வெளியிடப்பட்டுள்ளது – தொடர்பாக.

பார்வை : (Rt).CMD/TANGEDCO Proceedings No.5, Dated . 28.06.2017.

*********

தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர்களின் விருப்ப மாறுதல்களுக்கு கொள்கை வகுக்கப்பட்டு புதிய வழிகாட்டு முறைகள் பார்வையில் காணப்படும் உத்திரவில் வெளியிடப் பட்டுள்ளது, இதனை வரவேற்கிறோம்.

இதுசம்மந்தமாக கீழ்காணும் கருத்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். உத்திரவில் பத்தி 4 a,b மற்றும்c-யில் விருப்ப மாறுதல் ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்திற்கும், வட்டத்திற்குள் ஒரு கோட்டத்திலிருந்து இன்னொரு கோட்டத்திற்கும் விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட இடத்திற்கு (Place) கொடுக்கலாம் என்பது நடைமுறைக்கு ஏற்புடையதாக இருக்காது.

ஏனெனில் கோட்டத்திற்குள் விருப்ப மாறுதல் உத்திரவு வழங்கிட அதிகாரம் செயற்பொறியாளர்களுக்கும், வட்டத்திற்குள் விருப்ப மாறுதல் உத்திரவு வழங்கிட அதிகாரம் மேற்பார்வை பொறியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும்போது தலைமைப்பொறியாளர் பணியமைப்பு வழங்கும் உத்திரவு ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்கு மட்டும்தான் இருக்க வேண்டும். வட்டத்திற்குள் மறுநியமனம் வழங்குவது மேற்பார்வை பொறியாளரின் பொறுப்பாகும். அதே போன்று மேற்பார்வை பொறியாளர் வழங்கும் உத்திரவு ஒரு குறிப்பிட்ட கோட்டத்திற்குத்தான் இருக்க வேண்டும். கோட்டத்திற்குள் மறுநியமனம் வழங்குவது செயற்பொறியாளரின் பொறுப்பாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தை வெளிவட்டத்திலிருந்து வருபவரும், வட்டத்திற்குள் இருப்பவரும் கேட்டால் வட்டத்திற்குள் இருப்பவருக்கு முன்னுரிமை வழங்குவதும், அதேபோல் வெளி கோட்டத்திலிருந்து வருபவரும், கோட்டத்திற்குள்ளே இருப்பவரும் ஒரே இடத்திற்கு விருப்பம் தெரிவித்தால் கோட்டத்திற்குள் இருப்பவருக்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டும். காலம் காலமாக, அனைத்துத் தொழிலாளர்களும் ஏற்றுக் கொண்டு தொடர்ந்து கடைபிடிக்கும் முறையில் (CE/Personnel Memo.No.69140/IR.1(3)/96-1 Adm.Br.dated 11.6.1996) எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது. தற்போது பத்தி 4 a,b மற்றும்c-யில் கூறப்பட்டிருக்கும் முறையைப் பின்பற்றினால் குழப்பம் தான் மிஞ்சும்.

தலைமைப் பொறியாளர் பணியமைப்பு, தலைமைப்பொறியாளர் விநியோகம், மேற்பார்வை பொறியாளர் மற்றும் கோட்ட செயற்பொறியாளர் ஆகியோருக்கு அவரவருக்குரிய எல்லைக்குள் விருப்ப மாறுதல் உத்திரவு வழங்கிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கும் போது கோட்டப்பொறியாளர் தனது

எல்லைக்குள் இருக்கும் காலியிடத்திற்கு விருப்ப மாறுதல் வழங்கிட அவர் ஏன் வட்டத்திற்குள் விருப்ப மாறுதல் மேற்பார்வை பொறியாளர் வழங்கும் வரை காத்திருக்க வேண்டும்? அதே போல் மேற்பார்வை பொறியாளர் தனது எல்லைக்குள் இருக்கும் காலியிடத்திற்கு விருப்ப மாறுதல் வழங்கிட அவர் ஏன் தலைமைப்பொறியாளர் பணியமைப்பு மாநில எல்லைக்குள் மாறுதல் வழங்கும் வரை காத்திருக்க வேண்டும்? இவ்வாறு ஒவ்வொருவரும் காத்திருக்க வேண்டுமென்று சொன்னால் காலியிடம் எப்போது நிரப்புவது? தொழிலாளரின் குறை எப்போது தீர்வது?ஏதோ ஒரு சூழ்நிலையில் CE/P அலுவலகம் விருப்ப மாறுதல் வழங்காமல் இருந்தால், வட்டத்திற்குள்ளும், கோட்டத்திற்குள்ளும் விருப்ப மாறுதல்கள் பாதிக்காதா? என்பதையும் பரிசீலிக்குமாறு வேண்டுகிறோம்

பத்தி 5 a-ல் ஒரு குறிப்பிட்ட பொறுப்பிற்கு மாறுதல் கேட்கக் கூடாதென்பது சரியே. அதேபோல் ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்திற்குத்தான் விருப்ப மாறுதல் கேட்க முடியும். மற்றொரு வட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மாறுதல் கேட்கக்கூடாதென்ற தற்போதிருக்கும் விதிமுறை தொடர்ந்திட வேண்டும். குறிப்பிட்ட இடத்தில் காலியிடம் இல்லையென்றால் அந்த வட்டத்திற்கே விருப்ப மாறுதல் பெற்றிட இயலாமல் போகும். ஒருவருக்கு விருப்ப மாறுதல் வழங்கிட இடம் வேண்டும் என்பதற்காக அந்த இடத்தில் ஏற்கனவே பணியாற்றிக்கொண்டிருப்பவரை மாற்றக்கூடாது. (CE/PersonnelMemo.No.69140/IR.1(3)/96 -1 Adm.Br.dated 11.6.1996)

பத்தி 6(a)-ல் விருப்ப மாறுதல் கோரிட 25கி.மீ இடைவெளி இருக்க வேண்டும் என்பது தொழிலாளர்களுக்கு பெருத்த சிக்கலை ஏற்படுத்தும். எனவே இதனை 8கி.மீ.ஆக குறைத்திட வேண்டும்.

பத்தி 7ii ஓராண்டு பணிக்காலம் கணக்கிட தற்செயல்விடுப்பு (Casual leave) தவிர வேறெந்த விடுப்பும் சேராது என்று மட்டும் கூறியிருக்கலாம். அதை விடுத்து UEL on MC, EL, EOL w/o P&A and UEL on Private affairs ஆகிய விடுப்புக்கள் சேராது என்று பட்டியலிடுவது அவசியம் தானா? Maternity leave , study leave முதலிய விடுபட்டுப்போன விடுப்புகள் நிலை என்ன? ஓராண்டு பணிக்காலத்திற்கு சேருமா? சேராதா? என்ற கேள்வி எழும்.

பத்தி7 b,c,d,e ஆகியவைகள் நீக்கப்படவேண்டும். கோட்டத்திற்குள் விருப்ப மாறுதல் கேட்கும் களப்பணியாளர் மட்டுமே குறிப்பிட்ட இடம் (Place) கேட்க முடியும். வட்டத்திற்குள்ளும், ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்திற்கு விருப்ப மாறுதல் கோருபவர்கள் குறிப்பிட்ட இடம் கேட்க முடியாது. குறிப்பிட்ட கோட்டம் அல்லது வட்டம் மட்டுமே கேட்க முடியும் என்கிற தற்போதைய விதிமுறை தொடர்ந்தால் மட்டுமே நிர்வாகம் சீராக இயங்கும். இல்லையெனில் தேவையற்ற சிக்கல்கள் ஏற்படும்.

பத்தி 8-I இரண்டாண்டு காலம் பணிக்காலம் கணக்கிட தற்செயல்விடுப்பைத் (Casual leave) தவிர வேறு விடுப்புக்கள் சேராது என்று திருத்திட வேண்டுகிறோம்.

பத்தி 8- II ‘ரீ டிரான்ஸ்பர்’ வழங்க 2 ஆண்டு தடைக்காலம் என்பது பழைய வட்டத்திற்கு/ கோட்டத்திற்கு/உப கோட்டத்திற்கு மட்டுமே பொருந்தும். வேறு வட்டத்திற்கு/ கோட்டத்திற்கு/உப கோட்டத்திற்கு கேட்டால் தடையில்லை.

ஆனால் வேறு வட்டத்திற்கு/ கோட்டத்திற்கு/உப கோட்டத்திற்கு மாறுதல் கேட்பதையும் 'ரீ டிரான்ஸ்பர்' என்று கூறுவது சரியல்ல.

பத்தி 9- I,II,III தலைமையிடம் மாறுவது / உபரியில் மாறுவது குற்றம் ஏதுமில்லாமல் நிர்வாக மாறுதல் முதலிய நேர்வுகளில் மாறுதலுக்குள்ளாக்கப் பட்டவர்களின், விருப்ப மாறுதலுக்கான ஓராண்டு பணிக்காலம் கணக்கிட ஏற்கனவே பழைய வட்டத்தில் / இடத்தில் பணியாற்றிய காலத்தை கணக்கிலெடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளுகிறோம். இத்துடன் வட்டங்கள் /கோட்டங்கள் பிரிக்கப் படுவதால் (Bifurcation) மாற்றங்களுக்குள்ளாக்கப் பட்டவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். (CE/PersonnelMemo.No.69140/IR.1(3)/96 -1 Adm.Br.dated 11.6.1996)

பத்தி 11- குறிப்பிட்ட இடத்தில் காலி ஏற்பட்டால் என்பதை குறிப்பிட்ட வட்டம் (Circle) /இடம் (Station) என்று மாற்றிட வேண்டும்.

The length of service of the applicant in his present Place/post என்பதில் post என்பதை நீக்கிட வேண்டும்.

பத்தி 12 முன்நகல் ( Advance Copy) அனுப்புவதைப் பற்றி கூறப்படவில்லை. இதனைச் சேர்த்திட வேண்டும். உரிய காலத்திற்குள் வராத விண்ணப்பங்கள் திருப்பிட வேண்டும். விண்ணப்பதாரரின் பதிவு எண் தெரிவித்திட வேண்டும். (CE/PersonnelMemo.No.69140/IR.1(3)/96 -1 Adm.Br.dated 11.6.1996)

பத்தி 14- I வட்டத்திலிருந்து வட்டம் விருப்ப மாறுதல் கேட்பவர்கள் குறிப்பிட்ட வட்டம் (Circle) /இடம் (Station) மட்டுமே கேட்கலாம் என்று கூறப் பட்டுள்ளது. இது சரியல்ல. குறிப்பிட்ட வட்டம் என்று மட்டுமே இருக்க வேண்டும்.

பத்தி 14- III ஒரு சில இடங்களில் Place என்றும் ஒரு சில இடங்களில் Station என்றும் வெவ்வேறு வார்த்தைகள் பயன் படுத்துப் படுகின்றன. இது குழப்பத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே உள்ளது போல Station என்ற வார்த்தையைப் எல்லா இடத்திலும் பயன் படுத்திட வேண்டுகிறோம்.

பத்தி 15 தகுதிகாண் அறிக்கை (Performance Report) ஜனவரி 21-லிருந்து 30-க்குள்ளும், ஜூலை 16-லிருந்து 25-க்குள்ளும் அனுப்பிட வேண்டும் என்பது எழுத்தில் மட்டும் இருக்கக் கூடாது. செயலிலும் பின்பற்றிட வேண்டும்.

பத்தி 16- II மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தை உள்ளவர்கள் என்பதுடன் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட இதர மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் (தக்க சான்றுடன்) உள்ளவர்களுக்கும் விருப்ப மாறுதலில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

பத்தி17 அரசு மற்றும் அரசு சார்ந்த துறையில் பணியாற்றும் கணவன்/மனைவிக்கு மட்டும் முக்கியத்துவம்(Preference) தரவேண்டும். அதேபோல் திருமணமாகாத மற்றும் விதவைப் பெண்களுக்கும் முக்கியத்துவம் தர வேண்டும்.

மேற்கண்ட எங்களது கருத்துக்களை பரிசீலனை செய்து, குறைகளை சரிசெய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம். இது குறித்து எங்களது விரிவான கருத்துக்களை தெரிவித்திட அதிகார பூர்வமான பேச்சு வார்த்தைக்கு ஒரு நாளினையும், நேரத்தையும் ஒதுக்கித்தருமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள
பொதுச்செயலாளர்